வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 17.01.2026 சனிக்கிழமை | இதழ் : 17 | பக்கங்கள் : 08

# வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் இனவாதம் தலைதூக்க இடமளியோம்!

## யாழ்ப்பாணத்தில் அறிவித்தார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், ஜன. 17

இன்றும் கூட, சிலர் தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் அல்லது மதத் தளங்களை மையமாகக் கொண்டு, ஆங்காங்கே இன மோதல்களைத் தூண்ட முயற்சித்தாலும், வடக்கு, தெற்கு, கிழக்கு அல்லது வேறு எந்த இடத்திலும் இனவாதம் மீண்டும் தலைதூக்க இடமளிக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

மேலும், யுத்தத்தினால் இடம்பெயர்ந்த அனைத்து மக்களின் வீட்டுப் பிரச்னையும் தனது பதவிக் காலத்தில் தீர்க்கப்படும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நேற்று முற்பகல் சாவகச்சேரி, மீசாலை, வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற, யுத்தத்தினால் இடம்பெயர்ந்த குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்காக 2,500 வீடுகளை நிர்மாணித்தல் உட்பட நாடு முழுவதும் 31,218 குடும்பங்களுக்காக வீடுகளை நிர்மாணிக்கும் "தமெக்கென ஒரு இடம் - அழகான வாழ்க்கை' தேசிய வீட்டுத் திட்டம் 2026"

அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கோண்ட போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதனை தெரிவித்தார்.

வட மாகாணத்தை விரிவான அபிவிருத்திக்கு உட்படுத்தி அந்த மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தியுள்ளது என்று 07



# டான் பொங்கல் விழாவில் புஷ்பவனம் குப்புசாமி

யாழ்ப்பாணம், ஜன. 17

டான் தொலைக்காட்சி நடத்தும் பொங்கல் திருவிழா இன்று மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மைய திறந்தவெளி அரங்கில் நடைபெறும் இந்த நிகழ்வில் டான் தொலைக்காட்சி வருடாவருடம் வழங்கும் 'சாதனைத் தமிழன்' விருது ஈழத்தின் 07


# நயினை நாகபூசணி அம்மனை நேற்று வழிபட்டார் ஜனாதிபதி!

யாழ்ப்பாணம், ஜன. 17

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சென்று வழிபாடுகளை மேற்கொண்டார்.

நயினாதீவுக்கு உலங்கு வானூர்தி மூலம் சென்ற ஜனாதிபதி, நாக விகாரையில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டு , விகாரதிபதியிடமும் காலில் விழுந்து ஆசிகளை பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து , நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்துக்கும் சென்று வழிபாடுகளை மேற்கொண்டார். (அ)



# டித்வா சூறாவளியினால் இலங்கையில் 95 வீதமான உட்கட்டமைப்புகள் சேதம்!

## ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் மதிப்பீடு

கொழும்பு, ஜன. 17

2004 சுனாமிக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட மிக மோசமான அனர்த்தமாகக் கருதப்படும் டித்வா சூறாவளியின் தாக்கத்தால் 95 வீதமான உட்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

22 மாவட்டங்களில் உள்ள 85 பிரதேச செயலகப் பிரிவுகளில் நடத்தப்பட்ட ஆய்வில், 95 வீதமான பகுதிகளில் வீடுகள், வீதிகள், கைத்தொழில் 07

# பொங்குதமிழ் நினைவு நிகழ்வு இன்று!

யாழ்ப்பாணம், ஜன. 17

ஈழத்தமிழர் போராட்டத்தின் நியாயங்களை உலக அரங்கில் முன்வைக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வின் நினைவு இன்று யாழ்.பல்கலையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் இந்த நிகழ்வு 2001 இல் முதன்முறையாக நிகழ்த்தப்பட்டது. அதன் போது, தமிழ்த் தேசியம், தன்னாட்சி உரிமை, மரபுவழித் தாயகம் போன்ற மூன்று வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டன. 07

# பயங்கரவாத சட்டத்தின் கீழ் 20 வருடங்களுக்கு மேல் சிறைகளில் உள்ளவர்களின் தண்டனையில் தளர்வு?

## ஆராய்ந்து வருகிறது நீதி அமைச்சு

கொழும்பு, ஜன. 17

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 20 வருடங்களுக்கு மேலாக தண்டனை அனுபவிப்போரின், தண்டனையை தளர்த்துவது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான பரிசீலனைக்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

அதன்படி, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, 20 வருடங்களுக்கு மேலாக தண்டனையை அனுபவிப்போர் தொடர்பில் குறித்தக் குழு ஆராய்ந்து வருவதாகவும் அவர் கூறினார். 07

# பயன்பாடின்றி முடங்கும் பல கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள்!

## சுகாதாரத்துறையினர் தகவல்

கொழும்பு, ஜன. 17

வெளிநாடுகளில் இருந்து நன்கொடையாக இலங்கைக்குக் கிடைத்த 2,000 இற்கும் அதிகமான மருத்துவ உபகரணங்கள், நாட்டின் மருத்துவமனைக் கட்டமைப்பில் பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடப்பதாக சுகாதாரத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு அதிக செலவு ஏற்படுகின்றமை மற்றும் அவை இலங்கையின் மருத்துவமனைக் கட்டமைப்புக்கு பொருத்தமற்றதாக உள்ளமையே இதற்குக் காரணம் என சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மகரகம புற்றுநோய் 07

# ஜனாதிபதியின் மீது நாங்கள் நம்பிக்கை வைத்துள்ளோம்!

## தமிழரசின் எம்.பி. சத்தியலிங்கம்



வவுனியா, ஜன. 17

ஜனாதிபதி மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளபோதிலும் அந்த நம்பிக்கை நடைமுறைக்கு வருமா இல்லையா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி 07

# தலையில் தேங்காய் விழுந்ததால் யாழில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாணத்தில் தலையில் தேங்காய் விழுந்ததால் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் வடக்கு, கோப்பாய் பகுதியைச் சேர்ந்த தம்பிராசா ஜெயச்சந்திரன் (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 12ஆம் திகதி கொக்கத்தடி மூலம் தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்கியுள்ளார். இதன் போது தோங்காய் அவரது தலை மீது விழுந்துள்ளது. இந்நிலையில் அவர் தனது மனைவியிடம் விடயத்தை கூறியுள்ளார். 07

# அமெரிக்கத் தூதுவர் விடை பெறுவதனால் பாற்சோறு சாப்பிட்டு மகிழ்ந்த கம்மன்பில!




கொழும்பு, ஜன. 17

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், நேற்று நாடு திரும்பிய நிலையில், அது தொடர்பில் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடக சந்திப்பை நடத்தி, 07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ். போதனா வைத்தியசாலையில் சிறப்பாக நடைபெற்ற தைப்பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 17
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பொங்கல் நிகழ்வுகள் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது.



வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்ற பொங்கல் நிகழ்வில் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் தாதிய உத்தியோகத்தர்கள், கணக்காளர்கள், வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (அ)

## எக்னெலிகொட காணாமற்போன சம்பவத்தில் தொடர்புள்ள படை அதிகாரிக்கு பதவி உயர்வு!

### ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

கொழும்பு, ஜன. 17
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் கடத்தல் மற்றும் காணாமல் போன சம்பவத்தில் குற்றச்சாட்டுக்குள்ளான இராணுவ புலனாய்வு பிரிவு அதிகாரி கேணல் எரந்த ரதீஷ் பீரிஸின் பதவி உயர்வுக்கு கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன.

அவரை, பிரிகேடியராக பதவி உயர்த்தியதை எதிர்த்து ஊடக சுதந்திர அமைப்புகள் மற்றும் பலர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

இந்த விடயம் குறித்து எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

குறித்த பதவி உயர்வு நீதித்துறை செயல்முறையை பாதிக்கக் கூடும் என அவர் எச்சரித்துள்ளார்.

இந்த நடவடிக்கை சட்டத்தின் ஆட்சி மற்றும் பொறுப்புக்கூறலில் பொதுமக்களின் நம்பிக்கையைக் குலைக்கும் என சிவில் சமூக அமைப்புகளும் தெரிவித்துள்ளன. (அ)

## அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தால் அரசுக்கு 1 பில்லியன் ரூபா வருமானம்

கொழும்பு, ஜன. 17
இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் 2025ஆம் ஆண்டில் வருமான வரி மற்றும் திறைசேரி வரிகள் மூலம் அரசாங்கத்திற்கு 1.118 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 173 சதவீத பாரிய வளர்ச்சியாகும். இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ள விபரங்களின் படி, சொந்த வருமான மார்க்கங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் 26 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அத்தோடு, நாடு தழுவிய ஒசுசல மருந்தக வலையமைப்பின் வருமானம் 9 வீதத்தால் உயர்ந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அரச மருந்தக கூட்டுத்தாபன வரலாற்றில் முதல்முறையாக, சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவிற்கான நிதி ஒதுக்கீடுகள் அனைத்தையும் பயன்படுத்தி, மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான "இன்டெண்ட்" கட்டளைகளை முழுமையாக வழங்கியுள்ளது.


கிரிபத்கொட, நாரஹேன்பிட்டி, கேகாலை, கல்முனை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் ஐந்து புதிய ஒசுசல கிளைகள் திறக்கப்பட்டமை வருமான அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளதுடன், வினைத்திறனான நிர்வாகத்தினால் நஷ்டத்தில் இயங்கிய பல கிளைகள் மீண்டும் இலாபமீட்டும் நிலைக்கு வந்துள்ளதாக கூறப்படுகின்றது. (அ)

## தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17
வலி.வடக்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மயிலிட்டி. உப அலுவலகத்திற்குட்பட்ட மயிலிட்டி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவும் இறுதி நிகழ்வும் எதிர்வரும் 21ஆம் திகதி காலை 9.30 மணிக்கு குரும்பசிட்டி பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனும், சிறப்பு விருந்தினராக வலி.வடக்கு பிரதேசசபை செயலாளர் சிவகுமார் சிவானந்தனும், கௌரவ விருந்தினராக வறுத்தலைவிளான் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் சூசைராஜா திலகதீபன் மற்றும் சமாதான நீதவானும் ஆசிரியருமான எஸ். இராஜேந்திரகுமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

## யாழ்.நகரில் பட்டிப் பொங்கல்





யாழ்ப்பாணம், ஜன. 17
யாழ்ப்பாணம் சத்திரத்து ஞான வைரவர் ஆலய முன்றலில் பட்டிப்பொங்கல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் சத்திரத்து ஞான வைரவருக்கு விசேட அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று, கோ பூசை, கோ பவனி, பட்டிப்பொங்கல், கோமாதா கீர்த்தனைகள் என்பன இடம்பெற்றன.

கோ பவனி யாழ்ப்பாணம் பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய வீதி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதி, கே.கே. எஸ் வீதியூடாக ஆலயத்தினை சென்றடைந்தது. (அ)

## காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் கதிர்வீச்சு சிகிச்சைகள் இடைநிறுத்தம்

### 120 இற்கும் மேற்பட்ட புற்றுநோயாளர்கள் பாதிப்பு

கொழும்பு, ஜன. 17
காலி தேசிய மருத்துவமனையில் புற்றுநோயாளிகளுக்கான கதிர்வீச்சு சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் இரண்டு இயந்திரங்களும் செயலிழந்துள்ளதால், சிகிச்சைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவில் கதிர்வீச்சு சிகிச்சைகளுக்காக லீனியர் அக்சலரேட்டர் மற்றும் கோபால்ட் கதிர்வீச்சு இயந்திரம் ஆகிய இரண்டு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நோயாளிகளின் நிலைமையைப் பொறுத்து 5 முதல் 35 நாட்கள் வரை இந்தச் சிகிச்சைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும்.

இந்தநிலையில், லீனியர் அக்சலரேட்டர் இயந்திரம் கடந்த திங்கட்கிழமை முதலும், கோபால்ட் இயந்திரம் கடந்த புதன்கிழமை முதலும் செயலிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக நாளொன்றுக்கு சிகிச்சை பெற்றுவந்த 120 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக கூறப்படுகின்றது.

லீனியர் அக்சலரேட்டர் இயந்திரத்தைப் பழுதுபார்ப்பதற்கான சேவை ஒப்பந்தம் உரிய காலத்தில் புதுப்பிக்கப்படாததே அதனை மீண்டும் இயக்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு முக்கிய காரணம் எனத் தெரியவந்துள்ளது.

சம்பந்தப்பட்ட சேவை வழங்கும் நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சுக்கு இது குறித்து கதிர்வீச்சு தொழில்நுட்பவியலாளர்கள் அறிவித்துள்ள போதிலும், இயந்திரங்கள் இதுவரை பழுதுபார்க்கப்படவில்லை என மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## நல்லூரில் கிட்டு நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 17
போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வங்கக் கடலில் காவியமான தளபதி கிட்டு உட்பட 10 வீரர்களின் 33 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்திருக்கும் கிட்டு பூங்காவில் நடைபெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் சிறப்பம்சமாக நல்லூர் தியாக தீபம் திலீபன் ஆவணக் காப்பத்தினால் உருவாக்கப்பட்ட "கிட்டு ஒரு தனி மனித வரலாறு"



என்னும் தொனிப் பொருளுடன் தளபதி கிட்டுவின் வாழ்வியல் தொடர்பான ஆவணக் காட்சியகமும் திறந்து வைக்கப்பட்டது. (அ)

## காணிகளிலிருந்து வெளியேறுமாறு 62 பேருக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் அறிவித்தல்

முல்லைத்தீவு, ஜன. 17
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும், கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட திம்பிலி ஆகிய பகுதிகளிலுள்ள காணிகளிலிருந்து, காணிகளுக்குரிய மக்களை வெளியேறுமாறு புதுக் குடியிருப்பு பிரதேச செயலகத் தால் பல காணிகளுக்கு முன் பாக அறிவித்தல்கள் ஒட்டப் பட்டுள்ளன.

குறிப்பாக மக்கள் குடியிருக் கும் காணிகள் மற்றும் மக்க ளால் உப உணவுப் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தும் காணிகள் உட்பட 62 பேரின் காணிகளுக்கே இவ்வாறு புதுக் குடியிருப்பு பிரதேச செயலகத் தால் அறிவித்தல்கள் ஒட்டப் பட்டுள்ளன.

இது தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரனுக்கு அப்பகுதி மக்களால் தெரியப்ப டுத்தப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட மக்களிடம் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து குறித்த சிக்கலுக்குரிய காணிகளை பாராளுமன்ற உறுப்பினர் நேரடியாகவும் சென்று பார்வையிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
17.01.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், தை 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

## அடிப்படைவாதிகளின் தேசியவாதம்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங், தனது பதவிக் காலத்தை பூர்த்தி செய்து, அமெரிக்கா பயணமாகின்றார். அவர் நான்கு ஆண்டுகள் பணியாற்றிருந்தார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்களில் ஒப்பீட்டடிப்படையில் ஜுலியின் காலம், அதிக காலமாகும். புதிய தூதுவர் நியமிக்கப்படுவதில் ஏற்பட்ட காலதாமதமே அவர் மேலதிகமாக இருந்தமைக்கான காரணமாகும் - மற்றும்படி பிரத்தியேக காரணங்கள் எதுவுமில்லை. அவர் பயணமாவதற்கு முன்னர் தென்னிலங்கையின் முக்கிய அரசியல் தலைவர்களை சந்தித்திருந்தார்.

மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்திருந்தார். இந்த நிலையில் அவரது பதவிக் காலம் முடிவடைந்து செல்வதை முன்னாள் அமைச்சரும் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில பாற்சோறு உண்டு கொண்டாடியிருக்கின்றார். இதனை அவரது கட்சியினர் ஊடகங்கள் முன்னிலையிலேயே மேற்கொண்டிருந்தனர். கடந்த நான்கு ஆண்டுகளாக அவர் இலங்கையில் ஒரு சாபக்கேடாக இருந்ததாக கம்மன்பில தெரிவித்திருக்கின்றார்.

தென்னிலங்கை அரசியலில் பாற்சோறு பிரிக்க முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் வெற்றியை மகிந்த ராஜபக்ஷ தரப்பு பாற்சோறு உண்டே கொண்டாடியது. இப்போது அமெரிக்கத் தூதுவர் வெளியேறுவதும் பாற்சோறுடன் கொண்டாடப்படுகின்றது.

சில குறிப்பிட்ட சிங்கள தேசியவாதிகள் ஜுலி சங்கின் மீது கோபம் கொள்வதற்கு பிரத்தியேக காரணம் என்ன? அறகலய மக்கள் எழுச்சியின் போது அவரது கரம் திரைமறைவில் இருந்ததாக ராஜபக்ஷ முகாமிலிருந்த சிலர் நம்புகின்றனர் போலும் - கம்மன்பில ராஜபக்ஷ முகாமைச் சேர்ந்தவர். அத்துடன் கம்மன்பில அணியினர், தென்னிலங்கையின் சீன சார்பு சிங்களத் தேசியவாத முகாமைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய அமெரிக்க எதிர்ப்பிற்கு அதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கின்றது.

எப்போதுமே, கடும் தீவிரவாத தேசியவாதத்திற்கு எதிரிகள் கட்டாயம் தேவை. எதிரிகள் இல்லாமல் அவ்வாறானதொரு அடிப்படைவாதத் தேசியவாதத்தை பாதுகாக்க முடியாது. அமெரிக்க எதிர்ப்பு அல்லது இந்திய எதிர்ப்பு, ஏதோ ஒன்று இவர்களுக்கும் தேவைப்படும். இல்லாவிட்டால் உள்நாட்டுக்குள் வலிந்து ஒரு எதிரியை உருவாக்கிக் கொள்வர். ஒன்றில் தமிழ் மக்களை எதிரிகளாக காண்பிப்பர் அல்லது முஸ்லிம்களை எதிரிகளாகக் காண்பிப்பர். இந்த அடிப்படையில்தான் பொதுபல சேனா, ராவண பலய போன்ற அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. ஒரு எதிரியை உருவாக்கி, அதன் மீதான வெறுப்புணர்வை மக்கள் மத்தியில் பரப்புவதுதான் இவர்களுடைய இலக்கு. தேர்தல் அரசியலில் தோல்வியுற்றிருப்பவர்கள் மீண்டும் தங்களை விளம்பரப்படுத்துவதற்கு இதனை பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியவாத தரப்புக்களாக தங்களை அடையாளப்படுத்தும் சில குழுக்களுக்கும் தென்னிலங்கையின் அடிப்படைவாத குழுக்களுக்கும் இடையில் அதிக வேறுபாடில்லை. முன்வைக்கும் அரசியல் வாதங்களில் வேறுபாடுகள் இருந்தாலும்கூட, எதிரிகளை வலிந்து உருவாக்கிக் கொள்வதில் இவருக்கும் இடையில் ஒற்றுமையுண்டு. ஒருவேளை வெளியில் எதிரிகளை காண்பிக்க முடியாது போகும்போது, தங்களுக்குள் ஒட்டுக்குழு, முகவர், துரோகிகள் போன்ற சொற்களின் வழியாக தங்களுக்கான எதிரிகளை இவர்கள் உருவாக்கிக் கொள்வதுண்டு. அடிப்படையில் எதிரிகள் இல்லாமல் தங்களால் நகர முடியாது என்னும் பலவீனத்திலிருந்தே இவ்வாறான வாதங்கள் முகம் காட்டுகின்றன. மக்களுடைய நலன்களை முன்வைத்து அரசியலை முன்னோக்கிக் கொண்டு செல்லும் திறன் கொண்டவர்களுக்கு, இவ்வாறான செயற்கை எதிரிகள் தேவைப்படாது.

# இலங்கையில் பணியாற்றியமை எனக்கு பெருமைமிகு அனுபவம்

### அமெரிக்க தூதுவர் ஜூலி சங்



கொழும்பு, ஜன. 17

இலங்கையில் அமெரிக்கத் தூதுவராக கடந்த நான்கு ஆண்டுகள் பணியாற்றியமை ஒரு பெருமைமிகு அனுபவமாக இருந்தது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

நாட்டிலிருந்து நேற்று புறப்பட்ட அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அந்தப் பதிவில், எனது பணிக்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாடுகளுக்கு ஆழ்ந்த நன்றிகள். இலங்கையுடன் அமெரிக்காவின் உறவு தொடர்ந்து முன்னேற வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அமெரிக்கத் தூதுவராக ஜூலி சங் பணியாற்றிய காலப்பகுதியில், பொருளாதாரம், மனிதாபிமான உதவிகள், ஜனநாயக மதிப்பீடுகள், மற்றும் மக்களிடையேயான தொடர்புகள் உள்ளிட்ட பல துறைகளில் அமெரிக்கா - இலங்கை உறவுகள் குறிப்பிடத்தக்க அளவில் வலுப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## போதை அடிமையாளர்களை மீட்க மட்டு., யாழில் மறுவாழ்வு நிலையம்

கொழும்பு, ஜன. 17

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு ஒருநாளில் சிகிச்சை அளிக்கும் புனர்வாழ்வு நிலையம் அடுத்த வாரம் மட்டக்களப்பில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், இதே போன்ற புனர்வாழ்வு நிலையங்கள் யாழ்ப்பாணம், குருநாகல் மாவட்டங்களிலும் திறந்து வைக்கப்படவுள்ளன என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுபாட்டு சபை தெரிவித்துள்ளது.

இந்த மத்திய நிலையத்தில் சிகிச்சைக்காக வருவோர் ஒரே நாளில் சிகிச்சையை பெற்று வீடு திரும்ப முடியும் என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுபாட்டு சபையின் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு பிரிவின் பணிப்பாளர் ஷாந்த கமகே தெரிவித்துள்ளார். (ஐ)

**திருகோணமலை உப்பாறு பகுதியில்**

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற 5 படகுகள் கடற்படையினரால் பறிமுதல்

திருகோணமலை, ஜன. 17

திருகோணமலை, உப்பாறு- மகாவலி கங்கையை அண்மித்த பகுதியில் கடற்படையினர் மேற் கொண்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, மகாவலி கங்கையின் உப்பாறு பாலத்துக்கு அருகில் சட்டவிரோத மாக மணல் ஏற்றிச் சென்ற ஐந்து டிங்கி படகுகளை கடற்படையினர் கைப்பற்றினர்.

மேலும், சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட 30 லீற்றர் மது பானங்களும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இந்த நடவடிக்கையின் போது கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட மணலை ஏற் றிச் சென்ற ஐந்து டிங்கி படகு கள் மற்றும் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட மதுபானங்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

(எ)

## உள்ளூராட்சி நிர்வாகத்தை வலுப்படுத்த இந்தியா செல்லும் மலையக பிரதிநிதிகள்

கொழும்பு, ஜன. 17

மலையகத்திலுள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வு இந்தியாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஹைதரபாத் மற்றும் ஊட்டியில் குறித்த செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த செயலமர்வுக்காக பதுளை, நுவரெலியா, மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூராட்சி மன்றங்களின் 20 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 10 நாட்களுக்கு இந்த செயலமர்வு நடைபெறவுள்ளதாக இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

இதன்போது, உள்ளூராட்சி முறைகள், இலங்கையின் உள்ளூராட்சி சட்டதிட்டங்கள் மற்றும் தலைமைத்துவ பயிற்சி என்பன வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டம் தொடர்பான தெளிவூட்டல் நிகழ்வு கொழும்பில் நடத்தப்பட்டதாகவும் இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். சக ஊழியர்களின் விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**இடபம்**
தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர் களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கடகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு அமையும்.

**சிம்மம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களால் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். நல்லன நடக்கும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் எதையோ இழந்ததைப் போல் கவலைகள் வந்து போகும். உத்தியோகத்தில் சக வளைந்து கொடுத்து போவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**தனுசு**
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனசை வாட்டும். சக ஊழியர்களால் நிம்மதி இழப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். புகழ் கௌரவம் கூடும்.

**கும்பம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். திறமையைக் கண்டு வியப்பார். சாதிக்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

# எத்தடை வரினும் தகர்த்தெறிந்து இலக்கை நோக்கி பயணிப்போம்

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி






யாழ்ப்பாணம், ஜன. 17

"நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தின்போது எத்தடை வரினும் அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து இலக்கை நோக்கி பயணிப்போம்"- இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வேலணை மற்றும் மானிப்பாய் பகுதிகளில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பங்கேற்புடன் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் டித்வா புயலால் 400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். சிலர் காணாமல் போனார்கள். அது மட்டுமல்ல முழு நாடும் ஸ்தம்பிதமடைந்தது.

பொருளாதார ரீதியில் பெரும் அழிவுகள் ஏற்பட்டன. இவ்வாறு பேரழிவு ஏற்பட்டிருந்த நிலையிலும் சிலர் அரசியல் நடத்துவதற்கே முற்பட்டனர்.

இலங்கையால் இனி மீண்டெழ முடியாது, இந்த அரசாங்கத்தால் அப்பணியை செய்ய முடியாது என கோஷம் எழுப்பினர்.

அரசாங்க இயந்திரம்கூட மந்தகதியிலேயே இயங்குகின்றது. எனவே, மீண்டெழுவது சாத்தியமில்லாத விடயம் எனவும் கருத்துகளை பரப்பினர்.

ஆனால், எமது நாட்டு அரசாங்க ஊழியர்களும் மக்களும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப முன்வந்தனர்.

முழு நாடும் ஒன்றிணைந்து உதவித் திட்டங்களை முன்னெடுத்தது. வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் நேசக்கரம் நீட்டினார்கள். உலக நாடுகளும் துணை நின்றன.

தை பிறந்தாள் வழி பிறக்கும் என்பார்கள், அதற்காகவே நாம் பிரார்த்திக்கின்றோம். ஆனால், தை பிறந்தாலும் மக்களுக்கு வழி பிறக்கக்கூடாது என சில அரசியல்வாதிகள் சிந்திக்கின்றனர்.

எது எப்படி இருந்தாலும் தை பிறப்பதையும் இந்த நாட்டுக்கு வழி பிறப்பதையும் அந்த அரசியல்வாதிகளால் தடுத்து நிறுத்த முடியாது. அவர்களின் சூழ்சிகள் எல்லாம் தோற்கடிக்கப்படும்.

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் ஒன்றிணையும் பட்சத்திலேயே மீட்சி என்பது சாத்தியம். பிரிந்து நின்று எதையும் சாதிக்க முடியாது." - என்றார். (எ)

# கட்டைக்காடு மேற்கு குடியிருப்பு வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு மேற்கு குடியிருப்பு வீதி, பருத்தித்துறை பிரதேச சபையால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

நீண்ட காலம் புனரமைப்பு செய்யப்படாமல் காணப்பட்ட இந்த வீதியால் பயணித்த மக்கள் பெரும் சிரமங்களை சந்தித்து வந்தனர்.

கடந்த காலங்களில் மக்கள் இந்த குடியிருப்பு வீதியை புனரமைப்பு செய்து தருமாறு பல முறை கோரிக்கை விடுத்தும் அது நிறைவேற்றப்படவில்லை

தற்போது பருத்தித்துறை பிரதேச சபையால் 420 மீற்றர் நீளமான குறித்த வீதி 14 இலட்சத்து 83, 520 ரூபாய் செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. (எ-08)

# சர்வதேசத்தின் கரிசனையே எமது இறுதி நம்பிக்கை

## சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 17

சர்வதேசத்தின் கரிசனையே எமது இறுதி நம்பிக்கை என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக்கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் தைப்பொங்கல் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் கூறுகையில்,

"முடிவெடுக்க முடியாத இலங்கையினுடைய ஒரு அலங்கரிக்க அரசியல் சூழல்களை பார்க்கின்ற இந்த நேரத்தில் குறிப்பாக கல்வியில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தம் கூட ஒரு சிறிய போராட்டத்தின் ஊடாக உடனடியாகவே நிறுத்தப்படுகின்ற அளவுக்கு அல்லது யாரோ ஒரு சிலருடைய எதிர்ப்புகளுக்கு மத்தியில் கிடப்பில் போடப்படும் நிலையில் சர்வதேச சமூகத்தினுடைய நம்பிக்கையை வலியுறுத்துகிறோம். மிக முக்கியமாக தமிழர்களுக்கும் நல்ல ஆண்டாக இந்த ஆண்டு அமைய வேண்டும்"- என்றார். (எ)

# மன்னார்- பேசாலை கடலில் மூழ்கி இளைஞர்கள் இருவர் உயிரிழப்பு!

மன்னார், ஜன. 17

மன்னார் - பேசாலை பகுதியிலுள்ள கடலில் நீராடச்சென்ற நான்கு இளைஞர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

இருவர் சம்பவ இடத்திலிருந்த ஒரு குழுவினரால் மீட்கப்பட்டு மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


இதேவேளை, கடலில் மூழ்கி உயிரிழந்தவர்கள் பேசாலை பகுதியைச் சேர்ந்த 16 மற்றும் 17 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DAN
பொங்கல் திருவிழா


## இடம் – யாழ் திருவள்ளுவர் பண்பாட்டு மையத் திறந்தவெளி அரங்கு
## இன்று ஜனவரி 17ஆம் திகதி



மாலை 3.00 மணிக்கு
பொங்கலுடன் கூடிய
கோலப்போட்டி, உறியடித்தல்
பரதநாட்டியம், நாட்டுபுற, பாரம்பரிய,
கலை கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறும்.

சாதனைத்தமிழன் விருது பெறுகிறார்

# P.S.பாலமுருகன்



இரவு 07.00 மணிக்கு
தென்னிந்திய சினிமா பாடகர்

## புஷ்பவனம் குப்புசாமி

பங்குபற்றும்

## மாபெரும் இசை நிகழ்ச்சி

அனுமதி இலவசம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

REVLON | NLB NATIONAL LOTTERY | BANK OF CEYLON BOC Bankers to the Nation | Signal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் - இளைஞர்கள் இடையே குருக்கள்மடத்தில் கடும் வாக்குவாதம்

மட்டக்களப்பு, ஜன. 17

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருக்கள் மடம் பகுதியில் பொலிஸாருக்கும் இளைஞர்களுக்கும் இடையே ஏற்பட்ட கடும் வாக்குவாதத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். இதனால், அப்பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

குருக்கள்மடம் முருகன் ஆலய வீதியில் போக்குவரத்து பொலிஸார் வீதிச்சோதனை நடத்திய நிலையில் ரோச் லைட் அடித்து மோட்டார் சைக்கிள் ஒன்றை நிறுத்த முற்பட்டுள்ளனர்.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் பொலிஸாரின் உத்தரவை மீறிச் சென்ற நிலையில் பொலிஸார் அதனை நிறுத்த முற்பட்டபோது இந்த நிலைமை ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார், இளைஞர்களை தலைக்கவசத்தால் தாக்கிய போது இருவரும் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே விழுந்த பின்னரும் போக்குவரத்து பொலிஸார் அவர்களை தொடர்ந்து தாக்கியதாக அப்பகுதியை சேர்ந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளான இளைஞர்கள் செட்டிப்பாளையம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அப்பகுதிக்கு காரிலும் பொலிஸ் வாகனத்திலும் மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்ட நிலையில் அங்கிருந்த இளைஞர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களை நிறுத்துவதற்கு பல்வேறு வழிகள் உள்ளபோதும் தலைக்கவசத்தால் தாக்குதல் நடத்தியதுடன் அவர்கள் விழுந்த நிலையிலும் தாக்குதல் நடத்தியதாகவும் இது பொலிஸாரின் அராஜகமான செயல்பாடுகள் எனவும் இதன்போது அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் கொண்டுசெல்லப்பட்டதுடன் தாக்குதல் தொடர்பில் இளைஞர்களால் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(எ)



# திருகோணமலை - ஈச்சலம்பற்றில் கரையொதுங்கிய மியன்மார் தெப்பம்

திருகோணமலை, ஜன. 17

திருகோணமலை - ஈச்சலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைத்தோட்டம் கடற்கரை பகுதியில் பௌத்த அடையாளங்களை கொண்ட தெப்பமொன்று கரையொதுங்கியுள்ளது.

இது மியன்மார் நாட்டிலிருந்து வந்திருக்கலாமென்று சந்தேகிக்கப்படுகின்றது. இந்தத் தெப்பம் பௌத்த அடையாளங்களைக் கொண்டுள்ளது. பௌத்த பூஜை வழிபாடுகளின் பின் கடலில் விடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# அரசியல் லாபத்துக்காக போலிப் போராட்டம்

நுவரெலியா, ஜன. 17

கொட்டக்கலையில் இடம்பெற்ற போராட்டமானது அரசாங்கத்துக்கு அவதூறு ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு போலிப் போராட்டமாகும் என்று தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் தெரிவித்தனர். இதைக் கண்டித்து, நேற்று முன்தினம் ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

லொப்கில் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 21 பேருக்கு தலா 25, 000 ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 13 பேருக்கு அதனை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் நிவாரணம் கிடைக்கவில்லை எனக் கூறி அரசியல் இலாபத்துக்காக போராட்டம் நடத்தப்பட்டுள்ளது- என்று குற்றம் சுமத்தினர்.

கொட்டக்கலை பிரதேச சபையின் முன்னாள் உபதலைவி யாகுலமேரி இது குறித்து தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்த நிவாரணமும் வழங்கவில்லை எனக் கூறி, மக்களை திரட்டி போராட்டம் நடத்தியுள்ளனர். இது முற்றிலும் பொய்யானது. ஏற்கனவே 24 பேருக்கு பணம் கிடைத்துள்ளது, ஏனையோருக்கு ஓரிரு நாட்களில் கிடைத்துவிடும்.

இது தொடர்பில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீரவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதைத் தெரிந்துகொண்டே அரசியல் இலாபம் தேட போராட்டத்தை நடத்தியுள்ளனர் என தெரிவித்தார்.

# கண்டி - கட்டுகஸ்தோட்டை பகுதியில் இரட்டை சுரங்க அபிவிருத்தி திட்டம்

போக்குவரத்து பிரதி அமைச்சர் தகவல்

கண்டி, ஜன. 17

கண்டி - கட்டுகஸ்தோட்டை பிரதான வீதியில் அமைந்துள்ள மஹய்யாவ பிரதான சுரங்கத்தை இரட்டை சுரங்கமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டி நகருக்கு உள்வரும் பிரதான வீதிகள் மூன்றில் கட்டுகஸ்தோட்டை வீதியும் ஒன்றாகும். இது பிரித்தானியர் ஆட்சியின் போது அமைக்கப்பட்ட அதே அளவில் இருப்பதாகவும் இன்று வாகன போக்கு வரத்து அன்றைய காலத்தை விட அதிகரித்துள்ள நிலையில் அதனை அபிவிருத்தி செய்வது அவசியமாகும்.

எனவே, மேற்படி இடத்தில் பழைய சுரங்கம் இருக்கத் தக்கதாக அதற்கு பக்கத்தில் அதே போன்ற மேலும் ஒரு சுரங்கப் பாதையை அமைத்து இரட்டை வழிப் பாதையை ஏற்படுத்தவுள்ளோம். இதற்கான கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளது.

வெகுவிரைவில் இப்பணி ஆரம்பிக்கப்பட்டு விரைவில் அதனை பூர்த்தியாக்க திட்டமிட்டுள்ளோம்.

அரசு பற்றிய தர்க்க ரீதியான விமர்சனங்களை ஏற்கத்தயாராக உள்ளோம். ஆனால், ஆட்சியை வீழ்த்தும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் பொய்ப்பிரசாரங்களை ஏற்கமுடியாது. நாம் ஆட்சிக்கு வந்தால் பொருளாதார வீழ்ச்சி ஏற்படும் என்றார்கள்.

ஆனால், வழமைக்கு மாறாக வளர்ச்சியே ஏற்பட்டுள்ளது. சுங்கத் திணைக்களம் உட்பட பலவற்றின் வருமானம் அதிகரித்துள்ளது. சுற்றுலாத்துறை வளர்ந்து அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

பங்குச் சந்தை வளர்ந்துள்ளது. பொருளாதார வளர்ச்சி 1. 1 ஐ எட்டியுள்ளது. இப்படியானவற்றை ஏற்றுக்கொள்ள முடியாத எதிரணியினர் வீண் புரளிகளை ஏற்படுத்திவருகின்றனர்.

ஆட்சி மாற்றம் ஒரே நாளில் நடந்தாலும் அரச இயந்திரத்தின் சரியான இயக்கத்தை உடன் மாற்றி அமைக்க முடியாது. ஆனால், பெரும் பாலான அரச ஊழியர்கள் தற்போது சரியான பாதைக்கு வந்துள்ளனர். 2026ஆம் ஆண்டு அதனை 100 சதவீதம் மாற்றத் திட்டமிட்டுள்ளோம். ஏனெனில் அரச இயந்திரத்தை அரச அதிகாரிகளே இயக்குகின்றனர் -என்றார்.

(எ)

# பதாகைகளில் மட்டும் தான் சத்தியாக்கிரக போராட்டம்!

விமல் வீரவன்ஷை சாடிய ஆளும் தரப்பு

மட்டக்களப்பு, ஜன. 17

பதாகைகளில் மாத்திரம் தான் சத்தியாக்கிரகப் போராட்டம் என்று விமல் வீரவன்ஷவின் போராட்டத்தை அரச தரப்பு விமர்சித்துள்ளது.

சிறிய கூட்டமாக இருந்துகொண்டு இவர்கள் மீண்டும் இந்த நாட்டைக் குழப்புகின்ற வேலையைத் தான் செய்கின்றார்கள். விமல் வீரவன்ஷ பற்றி அனைவருக்கும் தெரியும். மகிந்த ஆட்சி காலத்திலே அவர் செய்த ஊழல்கள் தொடர்பில் இப்போது கூட அவருக்கு எதிராக வழக்குகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பல மோசடிகள், சமூகத்தை சீரழிக்கும் விடயங்களில் எல்லாம் முன்நின்று செயல்பட்ட ஒருவர். அவரது செயல்பாடுகளை மக்கள் என்றுமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். முக்கியமாக பெண்கள் இவரது கருத்துகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இவர்களை ஆதரிக்கப் போவதும் இல்லை என்று தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

(எ)

# காத்தான்குடி வாவியில் இராட்சத முதலை மீட்பு

மட்டக்களப்பு, ஜன. 17

மட்டக்களப்பு, காத்தான்குடி வாவிப் பாதையில் 12 அடி நீளமான இராட்சத முதலையொன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை இறந்த நிலையில் கரையொதுங்கியது. கடந்த 15 நாட்களுக்குள் இதே வாவியில் முதலை ஒன்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

காத்தான்குடி வாவியில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குப் பலமுறை புகார் அளித்திருந்தனர். இவ்வாறான நிலையில், அடுத்தடுத்து முதலைகள் உயிரிழப்பது அப்பகுதி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கரையொதுங்கிய இராட்சத முதலையை பார்ப்பதற்காக ஏராளமான பொதுமக்கள் அவ்விடத்தில் திரண்டு வருகின்றனர். உயிரிழந்த முதலையை அப்புறப்படுத்துவதற்கும் அதன் இறப்புக்கான காரணத்தை கண்டறியவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

(எ)

# அச்சுறுத்திய காட்டு யானை காட்டுக்குள் விரட்டப்பட்டது

மட்டக்களப்பு, ஜன. 17

மட்டக்களப்பு மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் காட்டு யானையொன்று வாழைச்சேனை ஹைறாத் மஸ்தான் முனையிலிருந்து ஓட்டமாவடி ரயில் கடவையைக் கடந்து நடுத்தீவு காட்டுப்பகுதிக்கு பாதுகாப்பாக விரட்டப்பட்டது.

கல்குடா அனர்த்த அவசர சேவை அமைப்பின் உதவியுடன் மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் காட்டு யானை கரையைக் கடந்து நீர் வழியாக காட்டுப்பகுதிக்கு விரட்டப்பட்டது.

கடந்த சில தினங்களாக வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேசங்களில் தோட்டங்களுக்குள் புகுந்து, பயன்தரும் தென்னை உட்பட பல நூறு மரங்களை அழித்து நாசமாக்கியும் கிராமங்களுக்குள் நுழைந்து பொதுமக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாகவும் இருந்து வந்த யானையே இவ்வாறு காட்டுக்குள் விரட்டப்பட்டது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

சுற்றுலாத் துறையை மேம்படுத்தக் கூடிய அழகிய கடற்கரைகளும், பல கவர்ச்சிகரமான இடங்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ளதுன என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக, பலாலி விமான நிலையத்தைப் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், காங்கேசன்துறை துறைமுகப் பணிகளை உடனடியாகத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதற்காக இந்திய அரசாங்கம் 60 மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

முதல் முறையாக யாழ்ப்பாண மக்கள் நம்பிக்கை வைக்கும் ஒரு அரசாங்கம் இன்று நாட்டில் உருவாகி இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அந்த நம்பிக்கை ஒரு துளி கூட மீற இடமளிக்கப்பட மாட்டாது என்றும் உள்ளங்களை ஒன்றிணைத்து, பிள்ளைகளுக்காக மோதலற்ற, ஒற்றுமையுடன் வாழக்கூடிய நாட்டை உருவாக்க ஒன்றிணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி-

குறிப்பாக யுத்தத்தினால் பெருமளவான வீடுகள் சேதமடைந்தன. நீண்டகாலம் சென்ற போதும் அந்த வீடுகள் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்படவில்லை. யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் அநேகமானோர் யுத்த சமயத்திலும் இடம்பெயர்ந்திருந்தார்கள். யுத்தத்தின் பின்னரும் இடம்பெயர்ந்திருந்தார்கள். நீண்டகாலமாக தமக்கென வீடோ, இடமோ இன்றி அவர்கள் வாழ்வது நியாயமல்ல.

எமது ஆட்சிக் காலத்திற்குள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள அனைத்து மக்களினதும் வீட்டுப் பிரச்சினையை நாம் தீர்ப்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இந்த பிரதேச மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் எமது அரசாங்கத்தை உருவாக்க பங்களித்தார்கள். ஆட்சியில் இருக்கும் தரப்பினருக்கு எதிரான மற்றும் உடன்பாடற்ற நிலைப்பாடே நீண்டகாலமாக இங்கு காணப்பட்டது. அதில் தவறில்லை. அரசாங்கம் இனவாதத்தை போசிப்பதாகவோ மக்களின் சொத்துக்களை திருடுவதாகவோ பொதுமக்கள் குறித்து சிந்திக்காமல் இருந்தாலோ அல்லது அரசாங்கம் தம்மைப் பற்றி மாத்திரமே சிந்திப்பதாக இருக்குமாயின் அரசாங்கமும் மக்களும் தூரமாவதை தடுக்க முடியாது.

ஏனென்றால் அவை மக்களுக்கு எதிரான முரண்பாடுகளை உருவாக்கும் அரசாங்கங்கள். தங்களையும் தங்கள் குடும்பத்தையும் பற்றி மாத்திரம் சிந்திக்கும் அரசாங்கங்களாகவே அவை இருந்தன. ஆனால் இலங்கை வரலாற்றில் முதன்முறையாக நாட்டின் பொதுமக்களின் அரசாங்கம் உருவாக்கப்பட்டது. தேர்தல் சமயங்களில் மக்களின் மனங்களில் குறிப்பாக வடபகுதி மக்களிடையே எம்மைப்பற்றி குழப்பமும் தெளிவின்மையும் இருந்திருக்கும். எம்மை ஆட்சிபீடமேற்ற வாக்களித்தாலும் சந்தேகத்துடன் தான் வாக்களித்திருக்கலாம்.

எமது அரசாங்கம் உருவாகி ஒரு வருடத்திற்கு சற்று கூடுதல் காலம் சென்றுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நீங்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய அரசாங்கம் முதன்முறையாக உருவாக்கப்பட்டுள்ளது. முதலில் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் கஷ்டங்களை தீர்க்க வேண்டும். அரசாங்கமென்ற வகையில் எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். வீடற்றவர்களுக்கு வீட்டை வழங்க நடவடிக்கை எடுப்போம். பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்க வேண்டும். வரலாற்றில் அதிக தொகையை அதற்காக ஒதுக்கியுள்ளோம்.

மக்களுக்கு சிறந்த வருமான வழியை அமைக்க வேண்டும். குறிப்பாக விவசாயத்துறை, தெங்குப் பயிர்ச்செய்கை, மீன்பிடித்துறை மற்றும் சிறிய கைத்தொழிற்துறைகள் என்பன இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரமாக உள்ளது. அந்த அனைத்துக் கைத்தொழிற்துறைகளுக்கும் ஆதரவு வழங்கி மக்களின் வாழ்க்கை நிலையை, இருப்பதை விட உயர்ந்த நிலைக்கு மேம்படுத்துவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். இது அதற்காக பாடுபடும் அரசாங்கம். அது மட்டும் எமக்கு போதுமானதல்ல. நீண்டகாலமாக எமது வாழ்வில் பெரும்பகுதியை யுத்தத்துடனே கழித்தோம்.

மோதல்களுக்கு மத்தியில் வாழ்ந்தோம். சந்தேகத்துடன் வாழ்ந்தோம். குரோதத்துடன் வாழ்ந்தோம். தமிழ் மக்கள் குறித்து சிங்கள இனவாதக் குழுக்கள் சந்தேகமாக பார்த்தன. சிங்கள மக்கள் குறித்து தமிழ் இனவாதக் குழுக்கள் சந்தேகக் கண்கொண்டு நோக்கின. நீண்டகாலமாக முரண்பாடுகள் நீடித்தன. அந்த மோதலினால் எவருக்கும் பலன் கிடைக்கவில்லை. அந்த மோதலினால் எஞ்சியது எதுவும் இல்லை.

வீடுகளை இழந்த குடும்பங்கள், பெற்றோர்களை இழந்த பிள்ளைகள், பொருளாதாரத்தில் முழுமையான வீழ்ச்சி என்பவை தான் கிடைத்தன. உற்றார் உறவினர்களை இழக்க நேரிட்டது. வடக்கு தெற்கு இரண்டிலுமுள்ளோர் இந்த அழிவினால் பாதிக்கப்பட்டனர். இந்த முழு அழிவின் பின்னாலும் அரசியல் தான் இருந்தது. அதிகாரத்தைப் பெறுவதற்காக சிங்கள மக்களை தூண்டிவிட்டார்கள். அதிகாரத்தைப் பெறுவதற்காக தமிழ் மக்களை தூண்டிவிட்டார்கள். இவ்வாறான இனவாத அரசியல் தான் முன்னர் காணப்பட்டது. இன்றும் ஆங்காங்கே அந்த நிலைமை இருக்கிறது.

தொல்பொருள் விடயத்தை முன்வைத்து அல்லது ஒரு மதஸ்தலத்தை காரணம் காட்டி இந்த இனவாத முரண்பாடுகளை தூண்டிவிடப் பார்க்கிறார்கள். மீண்டும் எமது நாட்டில் வடக்கிலோ, தெற்கிலோ, கிழக்கிலோ நாட்டின் எப்பகுதியிலும் சிங்களவரோ தமிழரோ முஸ்லிமோ எந்த ஒரு இனவாதத்திற்கும் இடமளிக்க மாட்டோம் என உங்களுக்கு ஒரு உத்தரவாதத்தை தருகிறேன். நாம் அனைவரும் சகோதரத்துவத்துடனும் ஒற்றுமையுடனும் வாழும் நாடு தேவை. அதே போன்று , சிறப்பான பொருளாதா நிலையுள்ள பொழுது போக்குள்ள மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை எமக்கு அவசியம்.

யாழ்ப்பாணத்தில் பாரிய விளையாட்டு மைதானமொன்றை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளோம். அதில் சில சிக்கல்கள் உருவாகியுள்ளன. அதனை எவ்வாறு தீர்ப்பது என்பது குறித்து நேற்று மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடினேன். அதற்கான பணிகளை இந்த வருடத்திற்குள் துரிதமாக நிறைவு செய்ய உள்ளோம். பிள்ளைகளுக்கு விளையாடுவதற்காக, அவர்களுக்கு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்த, பொழுதுபோக்காக வாழக்கூடிய வாய்ப்பை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

யாழ்மாவட்டத்தில் உள்ளக விளையாட்டரங்கொன்றை உருவாக்க திட்டமிட்டோம். ஆனால் அரசியல்வாதிகளின் ஊடாக வழக்கு தொடரப்பட்டது. யாழ்ப்பாண பிள்ளைகளுக்கு அது அவசியமானது. ஆனால் அரசியல்வாதிகள் வழக்குத் தொடர்கின்றனர். அதாவது அவர்கள் மக்களுக்கு எதிரான அரசியலை செய்கிறார்கள். நாம் மிக விரைவில் அந்த வழக்கை நிறைவு செய்து அதே இடத்திலோ அல்லது அதற்கு அண்மித்த பகுதியில் அந்த உள்ளக விளையாட்டரங்கின் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம்.

அதேபோன்று சுற்றுலாத்துறையின் ஊடாக பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பு கிடைக்கிறது. யாழ் மாவட்டம் மிகவும் ரம்யமான கடற்கரையைக் கொண்டுள்ளது. மக்களை கவரக்கூடிய பல பிரதேசங்கள் உள்ளன. இருந்தாலும் இன்னும் பலமான சுற்றுலாத்துறை கிடையாது.

பலாலி விமான நிலையத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து அதனை மறுசீரமைக்க எதிர்பார்க்கிறோம். மிகவிரைவில் காங்கேசன்துறை துறைமுக பணிகளை ஆரம்பிக்க இருக்கிறோம். இந்திய அரசாங்கம் 60 மில்லியன் டொலர் உதவியை வழங்க உடன்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் மிக முன்னேற்றகரமான சுற்றுலாத்துறையை ஆரம்பிக்க எதிர்பார்க்கிறோம். அதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

## பயங்கரவாத...

இந்தக் குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை விரைவில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் பொருந்தும் வகையிலேயே இந்த விடயங்கள் ஆராயப்படுவதாகவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் சுமார் 10 பேர் தொடர்ந்தும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான இயக்கம் தெரிவித்துள்ளது.

இவர்களின் தண்டனைகளை ஆராய்ந்து, விடுவிப்பது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நீதி அமைச்சரிடம் வினவியபோது-

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மாத்திரமே கைதுகள் இடம்பெற்றுள்ளதால், அது தொடர்பான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படுவதாகக் கூறினார்.

அத்துடன், எவரேனும் தனிநபர்கள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் தேவைப்படும் பட்சத்தில், அவர்களின் தனிப்பட்ட தகவல்களை தம்மிடம் சமர்பிக்குமாறும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார். (அ)

## டான்...

பிரபல நாதஸ்வர வித்துவான் பி.எஸ்.பாலமுருகனுக்கு வழங்கப்படுகின்றது.

ஈழத்தின் இசைத்துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் பாரம்பரிய விளையாட்டுக்கள், கலை கலாசார நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் இரவு 7 மணிக்கு தென்னிந்திய பிரபல பாடகர் புஷ்பவனம் குப்புசாமி பங்கேற்கும் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பயன்பாடின்றி...

மருத்துவமனைக்கு நன்கொடையாகக் கிடைத்த சுமார் 48 கோடி ரூபாய் பெறுமதியான மரபணு பகுப்பாய்வு இயந்திரம், அதற்குத் தேவையான மூலப்பொருட்கள் இல்லாத காரணத்தால் கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

பயன்படுத்தப்படாவிட்டாலும், குறித்த இயந்திரத்தைப் பராமரிப்பதற்காக ஆண்டுதோறும் பெருமளவிலான நிதி செலவிடப்பட்டு வருகின்றது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த சுகாதார பிரதி அமைச்சர் மருத்துவர் ஹங்சக விஜேமுனி, மகரகம புற்றுநோய் வைத்தியசாலையின் இயந்திரம் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் உரிய திட்டமிடல் இன்றிப் பொறுப்பேற்கப்பட்ட இவ்வாறான உபகரணங்களால் பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், இனிவரும் காலங்களில் நாட்டின் சுகாதாரக் கட்டமைப்புக்குப் பொருத்தமான உபகரணங்களை மட்டுமே உறுதிப்படுத்திய பின்னர் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதி அமைச்சர் உறுதியளித்தார். (அ)

## டித்வா...

மற்றும் சமூக உள்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

2025 டிசெம்பரில் வெளியிடப்பட்ட புவிசார் பகுப்பாய்வின்படி, நாட்டின் நிலப்பரப்பில் சுமார் 20 வீத மான பகுதி வெள்ளத்தில் மூழ்கியிருந்ததுடன், ஏறத்தாழ 2.3 மில்லியன் மக்கள் பாதிப்புக்குள்ளாகினர்.

93 வீதமான பதிலளிப்பாளர்கள் தமது பகுதியில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

பயிர் மற்றும் கால்நடை இழப்புகள், வேலை இழப்புகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டமை ஆகியன சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

கட்டுமானப் பொருட்கள் தட்டுப்பாடு, திறன் கொண்ட தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் நிதி நெருக்கடி என்பன மீளக் கட்டியெழுப்பும் பணிகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிப்புக்குள்ளானவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் போன்ற நலிவடைந்த பிரிவினராவார்.

மக்கள் பெரும்பாலும் அரச உதவி (76 வீதம்) மற்றும் சர்வதேச அமைப்புகளின் (45 வீதம்) உதவிகளை நம்பியுள்ளனர்.

எனினும், 40 வீதமான மக்கள் முறைசாரா கடன்களை நாடியுள்ளமை, குடும்பங்களின் கடன் சுமை அதிகரிப்பதைக் காட்டுகிறது.

சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு 95 பில்லியன் ரூபா நிதியுதவி வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதில் 3 வீத சலுகை வட்டி கடன் திட்டமும் உள்ளடங்கும்.

எனினும், முறைசாரா துறையில் பணிபுரிபவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் வலியுறுத்தியுள்ளது. (அ)

## பொங்குதமிழ்...

அந்த வகையில் இந்த பொங்குதமிழ் நிகழ்வானது வருடாவருடம் அனுஷ்க்கப்படுவது வழமை.

அதன்படி இன்று நண்பகல் 12 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பொங்குதமிழ் தூபியில், பொங்குதமிழ் நிகழ்வை அனுஷ்டிக்க அனைத்து மாணவர்களும், பொதுமக்களும் உணர்வோடு அணி திரளவேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (அ-05)

## தலையில்...

அதன்பின்னர் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பிக்கப்பட்டார். இதன்போது அவர் மயக்கமுற்றுள்ளார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-05)

## ஜனாதிபதியின்...

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம்,தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் வடக்கு மாகாண விஜயம் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் வடக்குக்கு வருகை தந்த ஜனாதிபதிகள் தமிழ் மக்களின் சொத்துக்களை அழித்தவர்களாகவும் அவர்களை காணாமல் ஆக்கியும், இடம்பெயரக் காரணமானவர்களாகவும் இருந்ததால் மக்கள் மத்தியில் வெறுப்பு காணப்பட்டது.

ஆனால் இந்த தலைமுறை ஜனாதிபதிகளின் கொடூரமான முகத்தை பார்க்கவில்லை. ஆனால், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் அத்தகைய கொடூரமான முகம் இருப்பதாக நான் கூற வரவில்லை. இளம் துடிப்பான நல்ல விடயங்களை பேசுகின்ற ஒரு ஜனாதிபதியாக இவர் இருக்கிறார்.

எங்களுக்கும் அவர் மீது நம்பிக்கை இருக்கிறது. நாட்டை முன்னேற்றுவார் என்ற நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கை நடைமுறைக்கு வருமா இல்லையா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

ஜனாதிபதியின் வடக்கு வருகை குறித்து பத்திரிகைகள் வாயிலாகவே நாம் அறிந்தோம். அதிகாரபூர்வமான அழைப்புகள் எதுவும் விடுக்கப்படவில்லை.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் கூட, ஜனாதிபதியோ அல்லது அமைச்சர்களோ வடக்குக்கு வரும்போது மக்கள் பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடும் பண்பு இருந்தது. ஆனால் தற்போதைய அரசு தனது கட்சி உறுப்பினர்களுடன் மட்டுமே ஆலோசனைகளை மேற்கொள்கின்றது.

ஜனாதிபதி மக்களைச் சந்திப்பது வரவேற்கத்தக்கது, போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களை அவர் அறிந்துகொள்ளவேண்டும். இந்த நாட்டை ஒரு முன்னேற்றகரமான திசைக்குக் கொண்டு செல்ல வேண்டுமானால், தமிழ் மக்களும் ஏனைய இனங்களைப் போல சம அந்தஸ்துடன் வாழ்வதற்கான சூழலை எவராவது ஏற்படுத்தினால் அத்தகைய முயற்சிக்கு நாம் எப்போதும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கின்றோம். அவரது வரவு நல்வரவாக இருக்கட்டும்-என்றார். (அ)

## அமெரிக்க...

பாற்சோறு சாப்பிட்டு தனது மகிழ்ச்சியை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

நான்கு வருடகால சாபம் முடிவடைகின்றது எனவும், இது பாற்சோறு சமைத்து கொண்டாடவேண்டிய தருணம் எனவும் அவர் விளக்கமளித்துள்ளார்.

ஜூலி சங் 2022 பெப்ரவரி மாதம் முதல் இலங்கைக்கான அமெரிக்காவின் தூதுவராக செயல்பட்டார். சுமார் 4 வருடகால இராஜதந்திர சேவையின் பின்னர் நேற்று அவர் நாடு திரும்பினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கல்வி சீர்திருத்தங்களுக்காக ரூ. 50 கோடி தவறாக பயன்பாடு

## பிரதமருக்கு எதிராக ஊழல் ஒழிப்பு குழுவில் எதிர்க்கட்சி முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 17

"கல்வி சீர்திருத்தங்களுக்காக 50 கோடி ரூபாய் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது" என்று தெரிவித்து எதிர்க்கட்சியினரால் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் தானும் இன்னும் சிலரும் முறைப்பாடளித்தனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஊடகங்களுக்கு நேற்றுக் கூறினார்.

மேலும், "இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் தாக்கல் செய்யப்படும் முறைப்பாடுகள் எப்போதும் இலஞ்சமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் முறைப்பாடளிக்கலாம். இதன்படி, நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டமை மற்றும் வீணாக்கப்பட்டது குறித்து முறைப்பாடளித்துள்ளோம்.

"கல்விக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நிதி வீணடிக்கப்பட்டமைக்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய பொறுப்பேற்க வேண்டும். மேலும், கல்வி சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதில் அரசாங்கம் நியாயமான செயல்முறையைப் பின்பற்றத் தவறிவிட்டது.

"அரசாங்கம் ஒரு வெள்ளை அறிக்கையை அறிமுகப்படுத்தி, அனைத்து பங்குதாரர்களுடனும் ஒரு பரந்த விவாதத்துக்கு உட்படுத்தியிருக்க வேண்டும்" - என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

# கொழும்பு துப்பாக்கிச்சூடு; சந்தேகநபர்கள் மூவர் கைது!

கொழும்பு, ஜன.

கொழும்பு - கொஹுவளையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் 30ஆம் திகதி கொஹுவலை, சரணங்கர வீதி, போதியவத்தை வீடு ஒன்றின்மீது இருவர் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றனர். இதில், 16 வயது சிறுமி ஒருவர் காயமடைந்தார். சிறுமியின் தாயை குறிவைத்தே இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் நடத்தப்பட்டதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்தது.

இதையடுத்து, நடத்தப்பட்ட விசாரணைகளில் மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கொழும்பு 9, 12ஐச் சேர்ந்த 27, 32, 35 வயதினராவர்.

மேலதிக விசாரணைகளை கொஹுவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# "டித்வா" ஏற்படுத்திய அழிவுகளை மதிப்பிட வருகிறது ஐ. எம். எவ். குழு

கொழும்பு, ஜன. 17

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அழிவுகளை மதிப்பிடுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) விசேட குழு நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி நாட்டுக்கு வருகை தரும் இந்தக் குழு எதிர்வரும் 28ஆம் திகதி வரை தங்கியிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழு டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அழிவுகளை மதிப்பிடுவதுடன், நாட்டின் விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்துக்கான கொள்கை தாக்கங்களைப் பற்றி விவாதிக்கவும் சர்வதேச நாணய நிதியத்தின் உண்மையை கண்டறியும் குழு நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

# அரசின் சட்டவிரோத முயற்சி எமது போராட்டத்தால் நிறுத்தம்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஜன. 17

மின்சார கட்டணங்களை அதிகரிக்கும் அரசாங்கத்தின் சட்டவிரோத முயற்சி எமது ஜனநாயக போராட்டத்தின் காரணமாகவே பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு நிறுத்தியது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட விசேட காணொலியிலேயே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் தேர்தல்களின் போது வாக்குறுதியளித்தபடி மின்சார கட்டணங்களை 33 சதவீதத்தார் குறைப்போம் என தொடர்ச்சியாக பிரஸ்தாபித்து வந்த போதிலும், ஆட்சிக்கு வந்த பின்னர் மின்சாரக் கட்டணங்களை 11.57 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான தீர்மானத்தை முன்வைத்திருந்தது.

அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை இன்று நிராகரித்தமைக்கு இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு நன்றி கூறுகிறோம். மின்சாரக் கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைக்க அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது. இது சமூக ஒப்பந்தமாகவுள்ளதால் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரசாங்கம் வாக்காளர்களுடன் செய்து கொண்ட சமூக ஒப்பந்தத்தை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். தற்போதைய அரசாங்கம் தவறான மின்சாரக் கொள்கையை முன்னெடுத்து வருகிறது. நிலக்கரி, எரிபொருள் மற்றும் அனல் மின் நிலைய மாபியாவை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றது.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை வலுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய தற்போதைய அரசாங்கம், தற்போது புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அதே வேளை 70 இலட்சத்துக்கும் அதிகமான மின்சார நுகர்வோருக்கு மின்சாரக் கட்டணங்களை அதிகரித்துள்ளது.

எரிபொருள் மற்றும் அனல் மின் நிலைய மாபியாவின் கைகளில் சிக்கியுள்ள தற்போதைய அரசாங்கம், மின்சார நுகர்வோரின் உரிமைகளை மீறுவதற்கு எம்மால் இடமளிக்க முடியாது. பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும், வீதிகளில் போராட்டங்கள் மூலம் மின்சார நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முன்னிலை வகித்து செயல்படும் - என்றார். (ஐ)

# இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படும் இளையோரின் எண்ணிக்கை உயர்வு

## மருத்துவ நிபுணர் நாலக திஸநாயக்கா

கொழும்பு, ஜன. 17

இருதய சத்திரசிகிச்சைக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்படுபவர்களில் 25 - 30 வயதுப் பிரிவினர் அண்மைய நாட்களில் அதிகரித்துள்ளனர் என்று இருதய சத் திரசிகிச்சை நிபுணர் நாலக திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பிரவில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாட்டில் மேற்கொள்ளப்படும் இருதய சத்திர சிகிச்சையில் 65 தொடக்கம் 67 சதவீதமானவை பைபாஸ் சத்திர சிகிச்சையாகும். அண்மைய நாட்களில் இருதய சத்திரசிகிச்சைக்காக மருத்துவமனைகளில் சேர்க் கப்படும் நோயாளர் எண்ணிக்கை வெகுவாக அதிகரித் துள்ளது. குறிப்பாக இளம் வயதில் பைபாஸ் சிகிச்சைக் காக வருபவர்களின் எண்ணிக்கையும் வீதமும் சடுதியாக அதிகரித்துச் செல்கிறது.

வயது வந்தவர்களில் பெரும் எண்ணிக்கையிலானோர் மாரடைப்பால் உயிரிழக்கின்றனர். இதய வால்வுகளில் ஏற்படும் அடைப்பால் மாரடைப்பு ஏற்படுகிறது. 60 தொடக்கம் 70 வயதுக்கு உட்பட்டவர்களே இருதய சத்திரசிகிச்சைக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்படு கின்றமை வழக்கம். ஆனால், சமீபகாலமாக 25 தொடக் கம் 30 வயதுக்குட்பட்ட இளையவர்களும் இந்த சத்திர சிகிச்சைக்காக வருகின்றனர்.

யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, காலி கராப்பிட்டி மருத்துவமனைகளிலேயே இருதய சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சிகிச்சைகள் வழங்கப்படுவதால், சத்திரசிகிச்சைக்காக முன்பதிவு செய்யப்பட்டுள்ள நோயாளர் காத்திருப்புப் பட்டியலில் ஒரு வருடத்துக்கும் அதிக காலத்துக்கு நீண்டுள்ளது.

இளையோர் தமது வாழ்வியல் முறைமைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# பால் தேநீரின் விலை ரூ. 10ஆல் குறைந்தது

கொழும்பு, ஜன. 17

பால் தேநீரின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. இந்த விலை குறைப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்ததாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) முதல் அமுலுக்கு வரும் வகையில் பால்மாவின் விலை குறைக்கப்பட்டதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

400 கிராம் பால்மாவின் விலை 50 ரூபாயாலும் ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலை 125 ரூபாயாலும் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் பால் தேநீர் கோப்பை ஒன்றின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# விமலுடன் தொலைபேசியில் பேசிய ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜன. 17

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸவுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை ரணில் அநுராதபுரத்திலிருந்து கொழும்பு பயணித்துக் கொண்டிருந்தபோதே விமலுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து உரையாடியுள்ளனர்.

விமல் வீரவன்ஸ பிரதமர் ஹரிணி அமரசூரிய முன்னெடுத்த கல்விச் சீர்திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தார். அது தொடர்பிலேயே அவர்கள் உரையாடினர் என்று தெரிய வருகிறது.

சில நிமிடங்கள் நடந்த இந்த உரையாடலின்போது நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்தும் இருவரும் உரையாடியிருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

# டுபாயில் கைதான 3 சந்தேகநபர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்!

கொழும்பு, ஜன. 17

டுபாயில் அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பாதாள உலக கும்பலைச் சேர்ந்த சூட்டி மல்லி என்று அழைக்கப்படும் நபர் உட்பட மூவர் நேற்று நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் நேற்று அதிகாலை 05.20 மணியளவில் டுபாயிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வரப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் தனிப்பட்ட செயலாளர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பாதாள உலக கும்பலின் தலைவரான "கொன்ட ரஞ்சித்" என்பவரின் சகாவான 30 வயதுடைய "சூட்டி மல்லி" என்பவரும் உள்ளார் என்று கூறப்படுகிறது.

அத்துடன், கைதானவர்களில் எல்பிட்டியவில் இடம்பெற்ற கொலை சம்பவத்துடன் தொடர்புடைய பாதாள உலக குழு ஒன்றின் தலைவரான "புன்சா" என்பவரின் 52 வயதுடைய சகாவும் மோசடி குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய இரத்மலானையைச் சேர்ந்த 56 வயதுடைய பெண் ஒருவரும் உள்னர் என்றும் கூறப்பட்டது.

மூவரும் கொழும்பு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.